www.tamilarangam.net

# தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

# NATIONAL LIBERATION FRONT OF THAMIL EELAM

30-03-1985

- சென்னை -

அன்புத் தோழர் ரங்கன் அவர்களுக்கு,

இதற்கு முன் உங்களுக்கும் தோழர் சிறீதரன் அவர்களுக்கும் இருபது இருபது இலக்கு அனுப்பி இருந்தேன். இத்துடன் இருபது இலக்கு அனுப்பியுள்ளேன். இன்றும் இருபது இலக்கு இன்று சிறீதரனிற்கு அனுப்புகின்றேன். சிறீதரனிடம் முன்னணிச் செய்தி 4ம் இதழ் அனுப்பியுள்ளேன் வாங்கிப் பார்க்கவும்.

இன்றைய இயக்கங்களின் போக்கு எமக்கு மிகுந்த வேதனையளிக்கின்றது. இயக்கங்கள் இன்று ஒரு பக்கமாக ஐக்கியம் பற்றிப் பேசிக் கொண்டு மறுபக்கம் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன. இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வது OR கடத்திச் சென்று கொலை செய்வது இன்று சாதாரணமாகி விட்டன. இது போன்ற செயல்கள் ஐக்கிய முன்னணிக்கான முயற்சிக்கு மிகவும் பாதிப்பைக் கொடுக்கின்றது.

அண்மையில் (19-03-1984) எமது தோழர் ராகவ் ஒரு தோழமை இயக்கம் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டார். (சென்னையில்). கடத்திச் சென்று அவரை விசாரணை செய்துள்ளனர். இயக்க இரகசியங்களைக் கேட்டுள்ளனர். (சொல்ல மறுத்ததால் துன்புறுத்தப் பட்டுள்ளார்) அதன் பின் எமது தோழர் கடத்திய வர்களிடம் இருந்து தப்பித்து வந்துவிட்டார். இச்செயல்கள் ஏனைய இயக்கங்களிலும் நடைபெறுகின்றது.

www.tamilarangam.net

அண்மையில் எமது தோழர் இருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவரது அஞ்சலி நோட்டீஸ் இத்துடன் அனுப்புகின்றேன்.

மற்றவை பின்.

தோழமையுடன்

ரவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்